**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்குதல் மற்றும் உயர்கல்வி தொடர உதவித் தொகை வழங்குதல் - 2010 – 2011 –ஆம் ஆண்டிற்கான திட்டத் தொடராணை மற்றும் செலவினம் ஒப்பளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் 1 (2)துறை,**

**அரசாணை (2 டி) எண்.01** **நாள்.14.07.2010**

**ஆனி 30 திருவள்ளுவர் ஆண்டு 2041**

**படிக்கப்பட்டது.**

1. அரசு ஆணை (2டி)எண்.46 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள்.18.12.2009.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க.எ.ண்.5113/சி.ப.1/2010. நாள் 26.05.2010.

-----

**ஆணை:-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2009-2010ம் ஆண்டு அரசுப் பொதுத் தேர்வில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியருக்கு கல்விக் கட்டணம், பிரெய்லி புத்தகங்கள் மற்றும் விடுதி கட்டணம் ஆகியவற்றிற்காக மொத்தம் ரூ.29,62,000/- செலவினம் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 13.05.2010 அன்று தமிழக சட்ட மன்றத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம் அவர்கள் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசுத் தொகை இந்த ஆண்டு முதல் மூன்று மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிப்பு செய்தார்கள்.

3. மேலே, இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் பார்வையற்றவர்களுக்கு கல்வியில் ஆர்வம் எழவும், அவர்கள் நம்பிக்கையும்

உற்சாகமும், பெறும் வகையிலும் அவர்களது தன்னம்பிக்கையையும், உழைப்பையும் பாராட்டும் வகையில், 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு இறுதித் தேர்வெழுதி மாநில மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ / மாணவிகளுக்கு ரொக்கப்பரிசினை மூன்று மடங்கு உயர்த்தி வழங்கிடவும், அவர்கள் உயர் கல்வி தொடர கல்விகட்டணம், பிரெய்லி பாடபுத்தகங்கள் மற்றும் விடுதி கட்டணத்திற்கான உதவித் தொகை ஆகியவற்றில் மாற்றமெதுவுமின்றி தொடர்ந்து வழங்கவும், 2010–2011 ஆண்டிற்கு மொத்தம் ரூ.40,02,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி உரிய ஆணை வழங்கிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இக்கருத்துருவை கவனமாக பரிசீலித்த பின்னர் 2009–2010ஆம் கல்வியாண்டில் பயின்று மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதி, முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ மாணவியர்களுக்கு பரிசுத் தொகையை மூன்று மடங்காக உயர்த்தி வழங்க, அரசு ஆணையிடுகிறது. மேலும் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வெழுதி மாநில மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப்பெறும் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியருக்கு உயர்கல்வி தொடர கல்விக் கட்டணம், பிரெய்லி பாடப் புத்தகங்கள் வழங்க, மற்றும் விடுதிக் கட்டணத்திற்காக சென்ற ஆண்டில் அனுமதித்த செலவினத்தின் அடிப்படையிலேயே தொடர்ந்து வழங்கவும் கீழ்க்கண்டுள்ளவாறு 2010–2011ம் ஆண்டிற்கு மொத்தம் ரூ.40,02,000/– (ரூபாய் நாற்பது இலட்சத்து இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், செலவினம் மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | செலவின விவரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | **ரொக்கப் பரிசு 10ம் வகுப்பு** | |
| | **(i) மாநில அளவில்** | |
| | முன்னதாக வழங்கப்பட்ட தொகை / தற்பொழுது உயர்த்தி வழங்கப்படும் தொகை | |
| | முதல் இடம் (ரூ.4000/–) ரூ.12000/– | |
| | இரண்டாம் இடம் (ரூ.3000/–) ரூ.9000/– | |
| | மூன்றாம் இடம் (ரூ.2000/–) ரூ.6000/– | 27,000/– |
| | **(ii) மாவட்ட அளவில்** | |
| | முன்னதாக வழங்கப்பட்ட தொகை / தற்பொழுது உயர்த்தி வழங்கப்படும் தொகை | |
| | முதல் இடம் (ரூ.2000/–) ரூ.6000/– | |
| | இரண்டாம் இடம் (ரூ.1500/–) ரூ.4500/– | |
| | மூன்றாம் இடம் (ரூ.1000/–) ரூ.3000/– | |
| | ரூ.13500/–X32 மாவட்டங்கள் | 4,32,000/– |

| | | |
|---|---|---|
| | **ரொக்கப் பரிசு 12ம் வகுப்பு**<br>**(iii)** மாநில அளவில்<br>முன்னதாக வழங்கப்பட்ட தொகை / தற்பொழுது உயர்த்தி வழங்கப்படும் தொகை<br>முதல் இடம் (ரூ.6000/–) ரூ.18000/–<br>இரண்டாம் இடம் (ரூ.4000/–) ரூ. 12000/–<br>மூன்றாம் இடம் (ரூ.3000/–) ரூ. 9000/–<br>**(iv)** மாவட்ட அளவில்<br>முன்னதாக வழங்கப்பட்ட தொகை / தற்பொழுது உயர்த்தி வழங்கப்படும் தொகை<br>முதல் இடம் (ரூ.4000/–) ரூ.12000/–<br>இரண்டாம் இடம் (ரூ.2500/–) ரூ.7500/–<br>மூன்றாம் இடம் (ரூ.1500/–) ரூ.4500/–<br>ரூ.24000/–X32 மாவட்டங்கள் | 39,000/–<br><br>7,68,000/–<br>---------<br>12,66,000/–<br>--------- |
| 2 | **10 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்**<br>(i) உயர்கல்வி தொடர கட்டணம்<br>ரூ. 1500 x 3 x 32 மாவட்டங்கள்<br>(96 மாணவ/மாணவியர்) | 1,44,000/– |
| | (ii) பிரெய்லி புத்தகங்கள்<br>ரூ.1000 x 3 x32 மாவட்டங்கள்<br>(96 மாணவ / மாணவியர் ) | 96,000/– |
| | (iii) விடுதிக் கட்டணம்<br>ரூ. 1000x3 x 32 மாவட்டங்கள்x10 மாதங்கள்<br>( 96 மாணவ / மாணவியர்) | 9,60,000/– |
| 3 | **12 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்**<br>(i) உயர் கல்வி தொடர கட்டணம்<br>ரூ. 3000 x 3 x 32 மாவட்டங்கள்<br>(96 மாணவ / மாணவியர்) | 2,88,000/– |
| | (ii) பிரெய்லி புத்தகங்கள்<br>ரூ. 3000 x 3 x 32 மாவட்டங்கள்<br>(96 மாணவ / மாணவியர்) | 2,88,000/– |
| | (iii) விடுதிக் கட்டணம்<br>ரூ. 1000 x 3 x 32 மாவட்டங்கள்x10 மாதங்கள் | 9,60,000/– |
| | மொத்தம் | ரூ.40,02,000/– |
| | (ரூபாய் நாற்பது இலட்சத்து இரண்டாயிரம் மட்டும்) | |

5. மேலே பத்தி நான்கில் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

“ 2235 – சமூக பாதுகாப்பும் நலனும் - 02- சமூகநலன் 101 மாற்றுத் திறனாளிகள் நலன் I – திட்டத்தில் சேராதது – AA – பார்வையற்றோர் பள்ளி – 59 – பரிசுகளும் வெகுமதிகளும் ” ( த.தொ.கு. 2235–02–101–AA- 5904).

6. மேலே பத்தி நான்கில் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ. 40,02,000/ல் நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட ரூ.24,44,000/– போக மீதி தொகை ரூ.10,58,000/– 2010–2011ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு /இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி கூடுதல் நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அனுமதிக்கப்படுகிறார். மேலும், இச்செலவினத் தொகையை 2010–2011ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவில் தவறாது சேர்த்தனுப்புமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அ.சா.கு எண்.36425/ நிதி(சந)/10, நாள் 13.07.2010ன்படி வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.460 (நானூற்று அறுபது)

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு.ஜவஹர்,
அரசு செயலாளர்.

பெறுநர்.
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் (திரு.எஸ்.கே.பி), சென்னை–9.
செயலரின் தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – சென்னை–9.
நிதி(சந)/(வ.செ.பொ.II)துறை, சென்னை–9.
இ. கோ / உ. ந.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.